வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 6.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலில் தொடர்ந்து 3-ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, அமெரிக்க அதிபர் உட்பட உலகத் தலைவர்கள் பலரும், வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- மத்தியில் மீண்டும் ஆட்சி அமைக்க தேசிய ஜனநாயக கூட்டணி தயாராகி வரும் நிலையில், பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா, இன்று, மூத்த பிஜேபி தலைவர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தி உள்ளார்.
- இண்டியா-கூட்டணி தலைவர்களும், இன்று புதுடெல்லியில், கூட்டங்களை நடத்தியுள்ளனர்.
- மக்களவைத் தேர்தலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பிக்களை வரவேற்க, மக்களவைச் செயலகம், முழு அளவில் தயாராகி உள்ளது.

வாழ்த்து

மக்களவைத் தேர்தலில் தொடர்ந்து 3-ஆவது முறையாக வெற்றி பெற்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கும் அவரது கட்சிக்கும் உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். அமெரிக்க அதிபர் திரு ஜோபைடன், இங்கிலாந்து பிரதமர் திரு ரிஷி சுனக் ஆகியோர்பிரதமர் திரு நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தனர். இந்தியா மற்றும் அமெரிக்காவின் பொது எதிர்காலத்திற்கான உள்ளாற்றல் திறந்து விடப்பட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருவதாகவும் சமூக ஊடகத்தில் திரு ஜோ பைடன் கூறி உள்ளார். இந்தியாவிற்கும்-இங்கிலாந்திற்கும் இடையிலான நெருக்கமான உறவுகள் தொடர்ந்து செழிப்படையும் என்று சமூக ஊடகத்தில் திரு ரிஷி சுனக் கூறி உள்ளார். ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்திய பொது தேர்தல் முடிவுகள், பிரதமர் திரு நரேந்திர மோடியின் உயர்நிலை அந்தஸ்தையும், விரைவான சமூக பொருளாதார வளர்ச்சிக்கான

மக்களின் ஆதரவையும், உலக அளவில் இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப் படுவதையும் நிரூபிக்கும் வகையில் அமைந்திருப்பதாக திரு புட்டீன் தெரிவித்துள்ளார். பிரஞ்ச் அதிபர் திரு இமானுவேல் மேக்ரோன், ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது- பின் ஜாயேத் அல்-நஹ்யான், கொரியக் குடியரசு அதிபர் திரு யூன் சுக் யியோல், ஐரோப்பிய கவுன்சில் திரு சார்லஸ் மிஷேல், மற்றும், இத்தாலி, மொரீஷியஸ், பூட்டான், நேபாள், இலங்கை, மலேசியா, கென்யா, நைஜீரியா, ஸ்பெயின், செர்பியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில், ஒருங்கிணைந்து பாடுபட தாம் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<u>நட்டா</u>

மத்தியில் மீண்டும் ஆட்சி அமைக்க தேசிய ஜனநாயக கூட்டணி தயாராகி வரும் நிலையில், பிஜேபி தேசிய தலைவர் திரு ஜேபி நட்டா, இன்று புதுடெல்லியில் மத்திய அமைச்சர்கள் மற்றும் மூத்த பிஜேபி தலைவர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மற்றும், திரு பியூஷ் கோயல், திரு பிரல்ஹாத் ஜோஷி, திரு மன்சுக் மாண்டவியா, திரு அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும் பிஜேபி தேசிய பொதுச் செயலர் திரு தருண் சுக், மற்றும், திரு வினோத் தாவ்டே உள்ளிட்ட மூத்த பிஜேபி தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஐக்கிய ஜனதா தளத்தைச் சேர்ந்த பல்வேறு தலைவர்களும் இன்று புதுடெல்லியில், கட்சியின் தலைவரும் பீகார் முதலமைச்சருமான திரு நிதிஷ் குமாருடன், அவரது இல்லத்தில் கூட்டம் நடத்தினர். தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்கள் நேற்று புதுடெல்லியில் நடத்திய கூட்டத்தில், கூட்டணியின் தலைவராக பிரதமர் திரு நரேந்திர மோடியை ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர். நாளை புதுடெல்லியில் தேசிய ஜனநாயக கூட்டணயின் எம்பிக்கள் கூட்டம் நடைபெற உள்ளது. பிஜேபி, தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி-ராம்விலாஸ், சிவசேனா ஷிண்டே பிரிவு, மற்றும், கூட்டணியில் இடம் பெற்றுள்ள இதர கட்சிகளின் புதிய எம்பிக்கள் நாளைய கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

## ஜேடியு

மத்தியில் புதிதாக அமைய உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் கேபினட் அமைச்சர் பதவி தொடர்பாக தாங்கள் எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை என்று ஐக்கிய ஜனதா தளம் தெரிவித்துள்ளது. அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு கேசி தியாகி. ஆகாஷ்வாணி நிருபரிடம் பேசுகையில் இதைத் தெரிவித்தார். அமைச்சரவை உருவாக்கம் குறித்து, தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளிடம் பேசும் பொறுப்பு, பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா, மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும், இதுதொடர்பாக கூட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார். ஆயினும் பீகாரில், வறுமை, வேலை வாய்ப்பின்மை, தொழிலாளர் புலப் பெயர்வு போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஏதுவாக, மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என, ஐக்கிய ஜனதா தளம் விரும்புவதாக அவர் மேலும் கூறினார். மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதாவிற்கு தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பீகாரில் 12 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தளம், மத்தியில் புதிய தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைவதில் முக்கிய பங்கு வகிப்பதும் குறிப்பிடத் தக்கது.

## இண்டியா-கூட்டணி

இண்டியா கூட்டணித் தலைவர்கள் இன்று புதுடெல்லியில் கூட்டங்களை நடத்தினர். திரிணமுல் காங்கிரஸ் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு அபிஷேக் பேனர்ஜி, கட்சியின் மூத்த தலைவர் திரு டெரக் ஓ-பிரியன் ஆகியோர், சமாஜ்வாதி கட்யின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ்வை அவரது இல்லத்தில் சந்தித்தனர். மூத்த ஆம்-ஆத்மி தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான திரு ராகவ் சத்தா, சிவசேனா உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த மூத்த தலைவர் திரு சஞ்சய் ரவுத்தை சந்தித்தனர். நேற்று மாலை புதுடெல்லியில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே இல்லத்தில் நடைபெற்ற இண்டியா கூட்டணித் தலைவர்களின் கூட்டத்தைத் தொடர்ந்து இன்றைய கூட்டங்கள் நடந்துள்ளன. பிஜேபி அரசால் ஆளப்பட வேண்டாம் என்ற மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற, இண்டியா கூட்டணி, சரியான நேரத்தில், சரியான நடவடிக்கை எடுக்கும் என திரு மல்லிகார்ஜுன கார்கே கூறி இருப்பதை வைத்துப் பார்க்கையில், இண்டியா கூட்டணி இப்போதைக்கு எதிர்கட்சி வரிசையில் அமரத் தீர்மானித்திருப்பது போல் தோன்றுவதாக, அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டு உள்ளனர்.

**செயலகம்**

நாடெங்கிலும் இருந்து, மக்களவைத் தேர்தலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்பிக்கள், தலைநகர் டெல்லிக்கு வரத் தொடங்கி உள்ள நிலையில், மக்களவைச் செயலகம், புதிய எம்பிக்களை வரவேற்க முழு அளவில் தயாராகி உள்ளது. எம்பிக்களின் பதிவு நடைமுறைகளை சுமுகமான முறையில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும், ஆன்-லைன் டிஜிட்டல் முறையில் பதிவு நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதால் நேரம் மிச்சமாகும் என்றும் மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது. புதிய எம்பிக்களுக்கு வங்கி கணக்கு தொடக்கவும், அடையாள அட்டை, மற்றும், சிஜிஎச்எஸ் சுகாதார அட்டை வழங்கவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வரும் 14-ஆம் தேதி வரை, சனி-ஞாயிறு உட்பட எல்லா நாட்களிலும், காலை 8 மணி முதல், இரவு 8 மணி வரை, புதிய எம்பிக்களுக்கான இந்த ஏற்பாடுகள் அமலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனம், நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் பயன் உள்ள இதர நூல்கள், புதிய எம்பிக்களுக்கு வழங்கப்படும் என்றும், தலைநகரில் இவர்களுக்கு தற்காலிக தங்கும் வசதி ஒதுக்கித் தர, கணிப்பொறி மென்பொருள் உருவாக்கப் பட்டுள்ளதாகவும் மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

**ஒடிசா**

ஒடிசா சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற பிஜேபி, முதலமைச்சர் பதவிக்கு பல்வேறு பெயர்களை பரிசீலித்து வருகிறது. மக்களவைத் தேர்தலில் ஒடிசாவில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள அனைத்து 20 பிஜேபி எம்பிக்களும், கட்சியின் மூத்த தலைவர்களுடன் பேசுவதற்காக நாளை டெல்லிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். ஒடிசாவின் முதலாவது பிஜேபி முதலமைச்சர் யார் என்பது குறித்து கட்சித் தலைமை விவாதித்து, மாநிலத்தில் ஆட்சி அமைப்பதற்கான செயல் திட்டத்தையும் உருவாக்கும் என பிஜேபி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஒடிசாவில் முதலமைச்சர் பதவிக்கு அடிபடும் பெயர்களில், மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், முன்னாள் மத்திய அமைச்சர் திரு ஜுவல் ஓராம், மத்திய அரசின் முன்னாள் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி திரு கிரிஷ் சந்திர முர்மு ஆகியோரின் பெயர்களும் அடங்கும். இவர்கள் அல்லாத வேறு ஒருவரிடம் முதலமைச்சர் பதவியை கட்சித் தலைமை ஒப்படைக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஒடிசாவில் 147 இடங்களுக்கு அண்மையில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், பிஜேபி 78 இடங்களில் வெற்றி பெற்று வரலாறு படைத்துள்ளது.

இரண்டாயிரமாவது ஆண்டு முதல் ஒடிசாவில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பிஜு ஜனதா தளம் இம்முறை, 51 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

***<u>கடல் சாகசம்</u>***

புதுச்சேரியில் என்சிசி மாணவர்களின், சமுத்திர சக்தி-கடல் சாகச பயணத்தை, முதலமைச்சர் திரு ரங்கசாமி நாளை, தேங்காய் திட்டு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து, கொடி அசைத்து தொடக்கி வைக்கிறார்.புதுச்சேரி என்சிசி தலைமையக குரூப் கமாண்டர் கர்னல் ஆர் ஆர் மேனன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

***<u>வெங்கட சுப்பா ரெட்டியார்</u>***

புதுச்சேரியில், முன்னாள் முதலமைச்சர் வெங்கட சுப்பா ரெட்டியார் நினைவு நாள், அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. மறைமலை அடிகள் சாலை-வெங்கட சுப்பா ரெட்டியார் சாலை சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் திரு தமிழ்செல்வன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சுயமரியாதை சுடர் எம்ஏ சண்முகம் நினைவு நாளும் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி, புவன்கரே வீதி-மரப்பாலம் சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கும், செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

***<u>வானிலை</u>***

தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை தீவிரமாக உள்ள நிலையில், தென் இந்தியப் பகுதிகளின் மேல் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால், இன்றைய தினம், கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகள், மற்றும், சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கரூர், திருச்சி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும், ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம் 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 10-ஆம் தேதி வரை லேசானது முதல், மிதமான மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, புதுக்கோட்டை, மற்றும்,

செம்பரம்பாக்கம் தானியங்கி மழைமானி மையத்தில், தலா 9 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

## ஆய்வு

பிரதமர் திரு நரேந்திர மோடி 3-ஆவது முறையாக மீண்டும் பதவி ஏற்கும் விழாவை புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் இருந்து நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான ஏற்பாடுகளை, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு சஞ்சய் ஜாஜு, பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கவுரவ் துவிவேதி, தூர்தர்ஷன் தலைமை இயக்குநர் திருமதி காஞ்சன் பிரசாத், ஆகாஷ்வாணி தலைமை இயக்குநர் திருமதி மௌஷ்மி சக்கரவர்த்தி உள்ளிட்ட மூத்த அதிகாரிகள், இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

## இந்தோ-பசிபிக்

பொருளாதார வளத்திற்கான இந்தோ-பசிபிக் கட்டமைப்பின் சார்பில் சிங்கப்பூரில் நடைபெறும், தூய பொருளாதார முதலீட்டாளர் பேரவைக் கூட்டத்தில் இந்தியா இன்று பங்கேற்றது. மத்திய வர்த்தகத் துறைச் செயலர் திரு சுனில் பர்த்வால், இந்திய பிரதிநிதிக் குழுவிற்கு தலைமை ஏற்றார். உலக அளவிலான முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மற்றும், கல்வியாளர்களை ஒருங்கிணைக்கும் வகையிலான இப்பேரவை, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில், நீடித்த உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டில் முக்கிய பங்களிக்கும் என்று அவர் தமது உரையில் கூறினார். இந்தியாவில் பசுமை எரிசக்தி, மின்சார வாகன உற்பத்தி உட்பட தூய எரிசக்தி தொடர்பான பல்வேறு துறைகளிலும், 2030-ஆம் ஆண்டிற்கான நாட்டின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு இலக்குகளை எட்டுவதிலும், 500 பில்லியன் டாலர் அளவிற்கு, முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதாக அவர் தெரிவித்தார். உலகெங்கிலும் இருந்து, இக்கூட்டத்தில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள, பருவநிலை தொழில் நுட்பம் தொடர்பான, 100 முன்னணி நிறுவனங்களில், 10 இந்திய நிறுவனங்களும் அடங்கும் என மத்திய தொழில்-வர்த்தகத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.